# CHINA : Open Borders, Lure of Better Life Aid Trafficking

## சீனா: வெளிநாட்டு சம்பாத்தியம் என்ற போர்வையில் ஏமாற்றப்படும் பெண்கள்
## - மா கிஹுவா

மண்லாய், சீனா குநடி 19 (ஐபிஎஸ்)- யூ லியானினதும் அவரது சகோதரியினதும் கடும் உழைப்பின் பலாபலன்களை சீனாவின் தென்மேற்கு கிராமமான மண்லாயில் பாரம்பரிய பாணியில் மூங்கில் தடிகளினால் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கூரைகளைக்கொண்ட வீடுகளுக்கு மத்தியில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இரண்டு மாடி வீட்டை பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

யூ லியானும் சகோதரியும் மலேசியாவில் நான்கு வருடங்கள் வேலை செய்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு யுனான் மாகாணத்தின் சிசுவாங்பன்னா மாநிலத்தின் மெங்காய் நகரில் 300 பேரைக்கொண்ட மண்லாயில் இந்த லீட்டை கட்டினார்கள்.

ஆனால் டாய் இனக்குழவைச் சேர்ந்த இவ்விரு பெண்களும் தென் பிராந்தியத்திலுள்ள மலேசியாவுக்கு எவ்வாறு போய் சேர்ந்தார்கள் என்பது மற்றுமொரு கதையாகும்.

தாய்வானைச் சேர்ந்த தனது காதலனை திருமணம் செய்ய காத்திருக்கும் 28 வயதான யூ லியான் (உண்மைப் பெயரல்ல) 1993இல் தாய்லாந்தில் தங்கம் வாங்கலாமெனக்கூறி கிராமவாசி ஒருவர் தம்மையும் தமது உறவுப் பெண்ணையும் அவரது செலவிலேயே தாய்லாந்துக்கு அழைத்துச் சென்றதாக கூறுகிறார்.

புது வாழ்வு நெலாலாம் என்ற ஆசையில் கிராமத்திலிருந்து புறப்பட்டு மலைப் பிரதேசங்களில் பல மைல் தூரம் நடந்து பர்மாவின் எல்லைப் பகுதிக்கு சென்றதாக யூ லியான் கூறுகிறார். இனி நடக்க முடியாது என்று சோர்வடைந்த வேளையில் மாத்திரமே நித்திரை செய்ததாகவும் அவர் கூறுகிறார்.

பர்மாவிலிருந்து தாய்லாந்துக்குள் பிரவேசித்து சியாங் ராய் மாகாணத்திலுள்ள மா சாய் நகரை அடைந்தனர். ஆங்கு 40 வயதைக் கடந்த ஒரு பெண்ணிடம் இவ்விருவரும் கையளிக்கப்பட்டனர். ஆவர் இவர்களை தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கிலுள்ள இரவு விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்.

இரவு விடுதியில் இருந்த பெண்களின் (சிலர் பர்மியர்கள்) உதவியுடன் யூ லியானும் அவரத உறவுப் பெண்ணும் இரண்டாவது நாளில் பாங்கொக் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தார்கள். பொலிஸார் இவர்களை சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் சேர்த்து விட்டார்கள். அங்கு இரண்டு வருடங்கள் இருந்த பின்னர் யூ லியான் மலேசியர் ஒருவரது வீட்டுப் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார்.

1999இல் மலேசியர் மூக்குப் புற்று நோயினால் மரணமடையவே அவரது மாமியார் சீனத் தூதரகத்தில் உதவி பெற்று யூ லியானை தாயகம் அனுப்பி வைத்தார்.

இதேவேளை, 6 வருடங்களுக்கு மேல் பாடசாலைக் கல்வியைப் பெறாத யூ லியானுடன் அவரது கிராமத்தைச் சேர்ந்த வேறும் பலரும் பெண்களை வைத்து வியாபாரம் செய்வோரின் வலையிற் சிக்கி ஏமாந்துள்ளார்கள். தற்போது ஒரு பிரயாண நிறுவனத்தின் சுற்றுலாக் கப்பல் ஒன்றில் பணியாற்றிவரும் லியானின் சகோதரியும் 1994ஆம் ஆண்டில் இத்தகைய வயைாபாரிகளால் ஏமாற்றப்பட்டவரே.

தமது சகோதரிக்கு தாய்லாந்து மொழியும் ஆங்கிலமும் பேசத் தெரியும் என்று லியான் பெருமையுடன் கூறுவார். கிராமத்திலுள்ள திருமணமான தம்பதியரே தமது சகோதரியை ஏமாற்றியதாகவும் லியான் கூறுகிறார். பின்னர் அத்தம்பதியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் பர்மாவுக்கு தப்பி ஓடி விட்டார்கள் என்றும் லியான் கூறினார்.

சீனா 1980களில் அதன் எல்லையை திறந்து விட்டதிலிருந்து யுனான் மாகாண எல்லைக்கு ஊடதக சட்டவிரோதமாக ஆட்களை கொண்டு செல்லும் நடவடிக்கைகள் அதிகரித்தன என்று மெங்காயில் இயங்கும் மெங்சே மகளிர் சம்மேளன அதிகாரி யூ ஹன்பியான் கூறுகிறார். எல்லையின் இருபக்கங்பளிலும் வசிக்கும் மக்களில் அநேகமானோர் ஒரே மொழியை பேசுபவர்களாகவும் ஒரே பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பசர்களாகவும் இருக்கிறார்கள். உள்ளுர்மக்கள் நீண்ட காலமாகவே எல்லைக்கூடாக சுதந்திரமாக போக்குவரத்துச் செய்து வருகிறார்கள் என்று ஹன்பியான் கூறுகிறார். மண்லாய் கிராமத்திலிருந்து மாத்திரம் 1994லிருந்து 1998வரை 7 இளம் பெண்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு ஊடாக தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமாக அழைத்து செல்லப்பட்டுள்ளார்கள்.

293,400 மக்கள் தொகையைக் கொண்டுள்ள மெங்காயிலிருந்து 2000ஆம் ஆண்டளவில் 1,041 பெண்கள் எல்லையைக் கடந்து பர்மாவுக்குள் சென்றுள்ளார்கள் என்று உத்தியோகபூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. சிலர் தங்கள் விருப்பத்தின்பேரில் சென்றார்கள். ஏனையோர் ஏமாற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் மீக்கொங்உபபிராந்திய பிரிவு சிறுவர்களும் பெண்களும் சட்டவிரோதமாக கடத்தப்படுவதை தடுக்கும் முயற்சியில் 1999ஆம் ஆண்டு முடிவில் மேற்கொண்ட மதிப்பீடொன்றின்போது மெங்காயைச் சேர்ந்த 5,000க்கும் அதிகமான கிராமவாசிகள் வருடம்தோறும் வெளிநாட்டில் வேலை பார்ப்பதற்காக வெல்கிறார்கள் என்று தெரிய வந்தது. இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்களாவர். இவ்விதம் புலம் பெயர்வோரில் சுமார் 40 சதவீதமானோர் சீனா தவிர்ந்த வேறு நாடுகளில் வேலை செய்கிறார்கள்.

யுனான் மாகாணத்திலுள்ள சிமாவோ, லின்சாங், சிசுவாங்கன்னா ஆகிய நகரங்களைச் சேர்ந்த 18 பல இளம் பெண்கள் (70 சதவீதத்திற்கு மேற்பட்டோர் 18 வயதுக்குட்பட்டவர்கள்) தாய்லாந்து, மலேசியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்று யுனான் மாகாண அரசாங்க பாதுகாப்பு திணைக்கள பிரதி அதிபர் சியான் யன்மிங் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்தலின் பின்னணியிலுள்ள பிதான சக்தி வறுமையாகும். கிராமிய மெங்காய் பிரதேசத்தில் தலா வருமானம் 120 அமெரிக்க டொலருக்கும் குறைவானதே. தாம் தாய்வானுக்குச் செல்ல முன்னர் 50 யுவான் நாணயத்தை(6 டொலர்) பார்த்ததே இல்லை என்று யூ லியான் கூறுகிறார்.

சீன சட்டத்தின்படி, பெண்களையும் சிறுவர்களையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்செயல்களுக்கு 10 வருட சிறைத் தண்டனை வழங்கப்படும். ஆனால் பாதிக்கப்பட்டவர் நிவாரணம் கோரி நீதிமன்றம் சென்றால் வழக்கு முடிந்து தண்டனை வழங்க பல வருடங்கள் செல்லலாம்.

சீனாவுக்கும் அயல் நாடுகளுக்குமிடையே உறுதியான சட்ட அமுலாக்கல் ஒத்துழைப்பின்றி எல்லை கடந்த ஆட்கடத்தல் சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தங்களுக்கு அதிகாரமில்லை என்று சீனப் பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.

குற்றவாளிகளை செரந்த நாட்டிடம் ஒப்படைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி சாட்சிகள் கடல் கடந்நு ன்று சாட்சியமளிப்பதற்கான பிரமாணங்களை உள்ளடக்க வேண்டுமென பாங்கொக் சுலலோங்தோம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் வொரசக்தி மஹத்தனபோல் ஆலோசனை தெரிவித்துள்ளார். ஆட்கடத்தலின் சமூக பின்னணி மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று யுனான் சமூக விஞ்ஞான கல்லூாயீல் புலம்பெயர்வு குறித்த ஆராய்ச்சியாளராக சேவையாற்றும் ஷாங் ஜீ தெரிவித்தார்.

நவீனமயப்படுத்தல் என்பது வானளாவிய கட்டிடங்களிலும் நெடுஞ்சாலைகளிலும் பொருத்தப்பட்டுள்ள ஒரு பொருளல்ல என்று ஷாங் ஜீ கூறினார். ஆட்கடத்தலுக்குட்பட்டு பின்னர் தப்பிக்கொண்ட பலர் காப்பாற்றப்பட்ட பின்னரும் தாம் சென்ற நாட்டிலோ அல்லது சொந்த நாட்டிலோ நிம்மதி அடைந்ததில்லை என்றும் ஷாங் கூறுகிறார்.

சீனாவின் எல்லைப் பிரதேசங்களில் மேலும் மக்கள் தொகை அதிகரிக்கலாமென் தெிர்பார்க்கப்படுகிறது. யுனான் மாகாணத்தின் தலைநகரான குன்மிங்கையும் பாங்கொக்கையும் இணைகச்கும் நெடுஞ்சாலை அமைப்பு வேலைகள் 2002ஆம் ஆண்டளவில் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வீதி வலையமைப்புடன் இதுவும் இணைந்து கொள்ளும். (End/Copyright IPS)